மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

5. அறிவிப்பு

தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு, 2006 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.*

4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)–*தொடர்ச்சி*

(இ) தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு, 2006

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2006 ஆகஸ்ட் 31]

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

6. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 39 – பொதுப் பணித் துறை–கட்டடங்கள்

(ஆ) கோரிக்கை எண் 40 – பொதுப் பணித் துறை–பாசனம்

(அ) கோரிக்கை எண் 39 – பொதுப் பணித் துறை–கட்டடங்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2006–2007 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 39–பொதுப் பணித் துறை–கட்டடங்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

(முற்பகல் 11–05

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பொதுப் பணித் துறை–கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 110,87,99,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.245,57,28,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 2299, திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை அரசு மருத்துவமனை மற்றும் வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் உள்ள அரசு மருத்துவமனைகள் ஆகியவற்றை பழுதுபார்த்து வெள்ளை அடித்து சுத்தமாக வைத்திருக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்: